செ.வெ.எண்:03/2018 நாள்:04.04.2018

சிவகங்கை மாவட்டம்

**இளையான்குடி ஊராட்சி ஒன்றியப் பகுதியில் ஊரக வளர்ச்சித்துறையின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் குடிநீர் திட்டப் பணிகள் குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.க.லதா,இ.ஆ.ப.,அவர்கள் திடீர் ஆய்வு.!!!**





சிவகங்கை மாவட்டம், இளையான்குடி ஊராட்சி ஒன்றியப் பகுதியில் இன்று (04.04.2018) ஊரக வளர்ச்சித்துறையின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் குடிநீர் திட்டப் பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.க.லதா,இ.ஆ,ப.,அவர்கள் திடீர் ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வின் போது தடியமங்கலம் ஊராட்சியில் குடிநீர் பயன்பாட்டிற்காக ரூ.6.50 இலட்சம் மதிப்பீட்டில் 10000 லிட்டர் கொள்ளளவு கொண்ட நீர்தேக்க மேல்நிலைத் தொட்டி கட்டுமானப் பணி நடைபெற்று வரும் பணியினை பார்வையிட்டு விரைந்து முடித்து பொதுமக்களின் தேவைக்கேற்ப குடிநீர் கிடைக்கும் வகையில் ஏற்பாடு செய்திட வேண்டும். மேலும் நீர்தேக்கத் தொட்டியில் நீர் ஏற்றும் நேரம் மற்றும் முடியும் நேரத்தை பதிவேட்டில் குறித்துக் கொள்ள வேண்டுமென அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார். அதனைத் தொடர்ந்து தடியமங்கலம் ஊராட்சியிலிருந்து பாணான்ஓடை வரை ரூ.2.16 இலட்சம் மதிப்பீட்டில் குடிநீர் குழாய் சீரமைப்பு மற்றும் நீட்டிப்பு பணி மேற்கொள்ளப்பட்டதை பார்வையிட்டதுடன் குடிநீர் தேவை கருத்தில் கொண்டு தேவைக்கேற்ப ஆழ்குழாய் கிணறுகளை சீரமைத்திட வேண்டும். குறிப்பாக குடிநீர் திட்டப் பணிகளுக்கு சிறப்பு கவனம் எடுத்துக் கொள்ள வேண்டுமென அறிவுறுத்தினார்.

பின்னர் நாகமுகுந்தன்குடியில் ரூ.98 ஆயிரம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள குளியல் தொட்டியை பார்வையிட்டதுடன் பொதுமக்கள் தேவைக்கேற்ப பயன்படுத்துவதுடன் தண்ணீரை வீணாக்காமல் பார்த்துக் கொள்ள பொதுமக்களிடம் அறிவுறுத்துவதுடன் அலுவலர்களும் கண்காணித்திட வேண்டும்.

தொடர்ந்து மெய்யனேந்தல் ஊராட்சிக்குட்பட்ட அதிகரை கிராமத்தில் மக்கள் பயன்பாட்டிலுள்ள காவிரி கூட்டு குடிநீர் நீர்தேக்கத் தொட்டியில் உள்ள குடிநீரில் குளோரினேசன் செய்யப்பட்டுள்ளதா என பார்வையிட்டதுடன் பொதுமக்களிடம் குடிநீர் தங்குதடையின்றி விநியோகம் செய்யப்படுகிறதா எனக் கேட்டறிந்தார்.

மேலும் கிருஷ்ணாபுரத்தில் ரூ.3.14 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் ஆழ்துளை கிணற்றுப் பணியினை பார்வையிட்டு, குடிதண்ணீர் விரைந்து வழங்கிட பணிகளை முடித்திட வேண்டுமென அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.க.லதா,இ.ஆ.ப., அவர்கள் அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திருமதி.காஞ்சனா, செயற்பொறியாளர் திருமதி.ஏழிசைசெல்வி, மாவட்ட ஊராட்சி செயலர் திருமதி.மகாலெட்சுமி, இளையான்குடி வட்டார வளர்ச்சி அலுவலர் திரு.அன்புதுரை மற்றும் அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

::வெளியீடு::

**செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், சிவகங்கை.**